### டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில்

# மெட்ரோ ரயில் சேவை தொடங்கியது

**• முதல் திட்டம் நிறைவுபெற்றது • இன்று இரவு வரை இலவசமாக பயணிக்கலாம்**

சென்னை, பிப். 11: டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை இடையிலான வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை நேற்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.

சென்னையில் 45.01கி.மீட்டர் தூரத்திற்கான மெட்ரோ ரயில் திட்டம் முழுமையாக முடிவடைந்தது. இந்த திட்டத்தின் இறுதி வழித்தடமான வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ் வரையிலான 10 கி.மீட்டர் தூரத்திற்கான சேவையை திருப்பூரில் இருந்து காணொளி காட்சி மூலமாக பிரதமர் மோடி பச்சைகொடி அசைத்து நேற்று தொடங்கி வைத்தார். இதேபோல், சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த விழாவில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்களுக்கான இணைஅமைச்சர் ஹர்திப்சிங் புரி, தமிழக அமைச்சர்கள் ஜெயகுமார், எம்.சி.சம்பத், சரோஜா, ஜெயவர்த்தன் எம்.பி மற்றும் மெட்ரோ ரயில் அதிகாரிகள் கலந்துகொண்டனர். புதிய வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்ட உடன் அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் வண்ணாரப்பேட்டை முதல் டி.எம்.எஸ் வரையில் பயணம் செய்தனர்.



▶ வண்ணாரப்பேட்டை-டிஎம்எஸ் இடையே மெட்ரோ ரயில் சேவையை காணொளி காட்சி மூலம் பிரதமர் தொடங்கி வைத்தார். சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த விழாவில் மத்திய இணைஅமைச்சர் ஹர்திப்சிங் புரி, தமிழக அமைச்சர்கள் ஜெயகுமார், எம்.சி.சம்பத், சரோஜா, ஜெயவர்த்தன் எம்.பி மற்றும் மெட்ரோ ரயில் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அப்போது, மத்திய இணை அமைச்சர் ஹர்திப்சிங் புரி நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

அனைவரும் இந்த சேவையை பயன்படுத்திகொள்ள வேண்டும். அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் இது சிறப்பான ஒன்றாக அமைந்துள்ளது. இதேபோல், மெட்ரோ ரயில் விரிவாக்க பணிகளில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தையும் தரத்தையும் மேம்படுத்தும் மெட்ரோ ரயில்சேவையை அனைவரும் பயன்படுத்திகொள்ள வேண்டும் என்றார்.

10ஆண்டுகள் நடந்த பணி: மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் கடந்த 2009ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்படி ரூ.19 ஆயிரத்து 58 கோடி செலவில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் நேற்றுடன் முழுமை பெற்றது. மொத்தம் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 19 சுரங்கபாதையிலும், 13 உயர் மட்ட ரயில் நிலையங்களாகவும் அமைந்துள்ளது.

### வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ்க்கு 11 நிமிடம்

முதல் வழித்தட மெட்ரோ ரயில் சேவை முழுமை பெற்றுள்ளதால் வண்ணாரப்பேட்டையில் இருந்து 40 நிமிடங்களில் விமானநிலையம் சென்றடையலாம். இதேபோல், சென்ட்ரலில் இருந்து 6 நிமிடங்களில் வண்ணாரப்பேட்டையும், வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ்க்கு 11 நிமிடத்தில் பொதுமக்கள் சென்றுவிடலாம்.

### அனைத்து வழித்தடங்களிலும்...

முதல் வழித்தட திட்டம் முழுமையாக நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் நேற்று மாலை 6 மணி முதல் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது. இதேபோல், இன்று இரவு 10 மணி வரையில் பொதுமக்கள் அனைத்து வழித்தடங்களிலும் இலவசமாக பயணம் செய்யலாம்.





▶ முதல் நாளில் பயணிகள் இலவசமாக பயணித்து மகிழ்கின்றனர். அடுத்தபடம்: சேவை தொடங்கியதை அடுத்து மெட்ரோ ரயில் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் வெற்றியை உறுதி செய்யும் வகையில் கட்டை விரலை உயர்த்தி காட்டுகின்றனர்.